**STARTING TIME 12.14 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 131/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 03.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ஜெயகாந்திமதி** Husband's Name : **சுந்தரம்**

Address : 8A/16A, அம்மா இல்லம், ஆலம்பாடி ரோடு,
அரபிக் கல்லூரி அருகில், பெரம்பலூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

Age : 56

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், அரசுப் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு சொந்தமான தாவா சொத்தை மீட்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்குள்ளது, அதன் விஸ்தீரணம் என்னவென்றால், நெமிலி கிராமத்தில் 1575 சதுரடி விஸ்தீரண காலியிடமாகும், நான் கிரையம் வாங்கிய போது முன்புறம் அகலம் 27 அடி, பின்புறம் 18 அடி, நீளம் 75 அடி ஆகும், ஆனால் எனக்கு உட்பிரிவு செய்துக் கொடுத்த போது அளவு குறைத்து வழங்கப்பட்டது.

2. உட்பிரிவு செய்து பட்டா வழங்க வேண்டி கொடுத்த மனுவிற்கு 07.10.2016 அன்று கட்டனம் செலுத்தியதற்கான ரசீதை தாவாவுடன் தாக்கல் செய்துள்ளேன்

என்றால், சரிதான். அந்த மனுவின் பேரில் நடவடிக்கை எடுக்க நிலுவையில் இருப்பதாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மனுவை யாரிடம் கொடுத்தேன் என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த மனுவின் பேரில் இன்றுவரை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட்டதா என்றால், குறைவாக பட்டா கொடுத்த அளவை பொறுத்து இதுவரை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

3. நான் கொடுத்த மனுவின் பேரில் உத்தரவு பிறப்பிக்காமல் உள்ள நிலையில் இவ்வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால், சரியல்ல. நான் கொடுத்த மனுவின் பேரில் உத்தரவு பிறப்பிக்காத வருவாய்துறை அலுவலர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத வகையிலும் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால், எம்.,ஏ., பி.எட்., படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும் என்பதால் தான் என் பிரமாண வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆமாம்.

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7–ல், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1–ம் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள காம்பவுன்ட் சுவர் தான் தாவா சொத்தில் 1–ம் பிரதிவாதியால் கட்டப்பட்டதாக சொல்லும் காம்பவுண்ட் சுவர் என்றால், சாட்சி புகைப்படங்களை பார்த்துவிட்டு சரி என்று சொல்கிறார்.

5. அந்த புகைப்படங்களில் உள்ளவர் தான் 1–ம் பிரதிவாதி என்றால், அவரை நான் பார்த்ததில்லை, ஆனால் இடம் மட்டும் என்னுடையது. இரண்டு புகைப்படங்கள் மற்றும் ரசீது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுநாள்வரை நான் 1–ம் பிரதிவாதியை பார்த்ததில்லையா என்றால், ஆமாம். 1–ம் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டி அவரை

தெரியவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

6. தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், கண்ணம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். கண்ணம்மாளுக்கு முன்பு தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், கண்ணம்மாளின் தாயார் அரசேலையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது, என் வீட்டில் இருந்து சுமார் 7 வீடுகள் தள்ளி அவர் வீடு உள்ளது.

7. தாவா சொத்து முதலில் அரசேலையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால், நினைவில் இல்லை ஆனால் 1999–ம் ஆண்டு கண்ணம்மாள், விஸ்வநாதன் மற்றும் அன்பழகன் ஆகியோர் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அது போன்ற பாகம் பிரிவினை மேற்படி நபர்களுக்கு இடையே நடைபெறவில்லை என்றால், சரியல்ல. அந்தப் பாகப் பிரிவினைப் பத்திரத்தில் கண்ணம்மாள் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல.

8. அரசேலையம்மாள் என்பவருக்கு கண்ணம்மாள் என்பவர் ஒரே மகள் என்றால், சரிதான். அரசேலையம்மாள் காலமான பிறகு அவருக்கு சொந்தமான சொத்தை கண்ணம்மாள் தான் அனுபவித்து வந்தார் என்றால், கண்ணம்மாளும், அவரது மகன்களும் அனுபவித்து வந்தார்கள். கண்ணம்மாளின் மகன்களுக்கு தாவா சொத்துகளில் எவ்வித உரிமையோ, அனுபவமோ இருந்ததில்லை என்றால், சரியல்ல. அரசேலையம்மாள் காலமான பிறகு கண்ணம்மாள் தான் தாவா சொத்தை முழுஉரிமையாளராக அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல, அவரது மகன்கள் இருவரும் சேர்ந்து தான் அனுபவித்து வந்தார்கள், அவர்களுக்கு இடையே பிரச்சனையும் இருந்து வந்தது.

9. கண்ணம்மாள் என்பவருக்கு முதலில் சர்வே எண் 163–ல் இருந்த 20 செண்ட் உரிமையாக இருந்தது என்றால், சரிதான். தாவா சொத்தை 11.03.2003 அன்று 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக தாவாவில் சொல்லியுள்ளேன்

என்றால், சரிதான், ஆனால் நான் 2005–ம் வருடம் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு 5 நாட்களுக்கு முன்பு வில்லங்க சான்று வாங்கி பார்த்த போது தாவா சொத்து கண்ணம்மாளின் பெயரில் தான் இருந்தது, 2–ம் பிரதிவாதி பெயரில் இல்லை. நான் வாங்கி பார்த்ததாக சொல்லும் வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிய வரும் என்றால், சரிதான், அந்த ஆவணம் என் வசம் உள்ளது.

10. நான் சொல்வது பொய் என்றும், சர்வே எண் 163–ல் இருந்த 20 செண்ட் சொத்தில் ஒரு பகுதியான தாவா சொத்தை 11.03.2003 தேதியிலேயே 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, தெரிந்திருந்தால் தாவா சொத்தை நான் கிரையம் வாங்கியிருக்கமாட்டேன். 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை அவர் பெயரில் உட்பிரிவு செய்துக் கொண்டார் என்றால், அவர் பெயரில் 2016–ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் என் பெயரில் 2006–ம் ஆண்டே உட்பிரிவு செய்யப்பட்டது. என் பெயரில் செய்யப்பட்டதாக சொல்லும் உட்பிரிவே தவறானது என்றால், சரியல்ல.

11. 1–ம் பிரதிவாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்களை நான் படித்து தெரிந்துக் கொண்டேனா என்றால், தெரிந்துக் கொண்டேன். அந்த பதிலுரையில் 2–ம் பிரதிவாதி கிழக்கு மேற்கு 23 அடி, வடக்கு தெற்கு 75 அடி, ஆக மொத்தம் 1725 சதுரடி சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த பதிலுரையில் 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியாக கிழக்கு மேற்கு 3 அடி, வடக்கு தெற்கு 75 அடி சொத்தினை ஈஸ்வரன் என்பவருக்கு 2017–ம் ஆண்டு கிரையம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான், மேற்படி ஈஸ்வரன் எனக்கு சொந்தமான இடத்தில் தான் 3 அடி அகலத்தில் அவரது வீட்டிற்கு

செல்லும் மாடிப்படியை கட்டியுள்ளார். அந்த மாடிப்படியின் வழியாக தான் அவர், அவருடைய வீட்டிற்கு செல்கிறாரா என்றால், இல்லை, முன்புறம் உள்ள படியின் வழியாக செல்கிறாரா அல்லது பின்புறமாக உள்ள படியின் வழியாக செல்கிறாரா என தெரியவில்லை, ஆனால் அவர் கட்டியுள்ள படி எனது இடத்தில் தான் உள்ளது.

12. இவ்வழக்கில் பதிலுரை தாக்கல் செய்த பிறகு மேற்படி ஈஸ்வரன் என்பவர் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால், தாவா சொத்து முழுவதுமே பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலையில் ஈஸ்வரன் மீது தற்சமயம் நடவடிக்கை எடுக்கவில்லை. 11.03.2003 அன்று 2–ம் பிரதிவாதி பெயரில் உள்ள வா.சா.ஆ.5 கிரையப் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால், சரியல்ல. 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியாக கிழக்கு மேற்கு 20 அடி, வடக்கு தெற்கு 75 அடி அளவுள்ள சொத்தை 2–ம் பிரதிவாதி கடந்த 15.02.2017 அன்று 1–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.6 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

13. வா.சா.ஆ.6 கிரையத்திற்கு பின்னிட்டு அந்த சொத்தை 1–ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான், ஆனால் அவரது கிரையத்திற்கு முன்பே நான் கிரையம் பெற்றுள்ளேன், என் பெயரில் பட்டாவும் பெற்றுள்ளேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பே தாவா சொத்தை 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், எனவே அவரது கிரையம் தான் சட்டப்படி செல்லும் என்றும், அக்கிரையத்திற்கு பின்னிட்டு நான் வாங்கிய கிரையம் செல்லாது என்றால், சரியல்ல.

13. தாவா சொத்தில் ஒரு தென்னைமரம் இருந்தது என்றால், சரிதான். அதை 1–ம் பிரதிவாதி தான் வெட்டிவிட்டார் என்றால், சரிதான். நான் வேலை நிமித்தமாக எந்த ஊருக்கு பணி மாறுதலில் சென்றேன் என்றால், 2009–ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்திற்கு பணிமாறுதலில் சென்றேன். நான் எனது தாவாவில்

வெளிநாட்டில் வேலை செய்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான், ஆனால், அது தவறாக சொல்லப்பட்டுள்ளது, நான் வெளிநாடு எதுவும் சென்றதில்லை. தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதி அவர் பெயரில் பட்டாவும் பெற்றுள்ளார் என்றால், அது பற்றி தெரியாது.

14. நான் தாவா சொத்தை எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால், 23.11.2005 அன்று வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.2 ஆவணம் பொய்யான ஆவணம் என்றும், அந்த ஆவணம் 1–ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. தாவா சொத்தை 2–ம் பிரதிவாதி கிரையம் பெற்று அவர் அனுபவித்து வந்து, அவர் செய்த கிரையத்தின்படி 1–ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால், நான் வெளியூரில் இருந்ததால் அதை பயன்படுத்திக் கொண்டு மேற்படி பத்திரங்களை எழுதிக் கொண்டுள்ளார்கள்.

15. நான் கிரையம் பெற்ற பின்னிட்டு தாவா சொத்தை நான் அனுபவித்து வரவில்லை என்றால், சரியல்ல, நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றும், 1–ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. நான், 1–ம் பிரதிவாதிக்கு எதிராக சுவாதீனம் கேட்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்பதால், தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 01.14.P.M.**

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.03 17:36:59 +0530